# வலயக் கல்வி அலுவலகம்
# மன்னார்

தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2023

பகுதி :- 1

நேரம்:- 1மணித்தியாலம் சுட்டெண் :-..........................

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்.

**பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்கான அறிவுறுத்தல்கள்.**

- உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே தருக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் கீழே தரப்பட்டுள்ள மூன்று விடைகளிலிருந்து சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க்கோடிடுக.

**விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்**

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் | |
| இறுதிப்புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | பெயரும் ஒப்பமும் |
|---|---|
| முதலாவது பரீட்சகர்<br>புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்படுள்ளது. என உறுதிப்படுத்துகின்றேன். | ......................<br>பெயர்<br>......................<br>ஒப்பம் |
| இரண்டாவது பரீட்சகர்<br>முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | ......................<br>ஒப்பம் |
| மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்<br>மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | ......................<br>பெயர்<br>......................<br>ஒப்பம் |
| அதிபர்<br>மேற்பார்வை செய்தேன் | |
| வலய மேற்பார்வையாளர் | |

1.பின்வரும் படத்தை நன்கு அவதானிக்குக. இப் படம் பற்றிக் குறிப்பிடப்படும் **தவறான** கூற்று எது?




1.இங்கு இரண்டு பூச்சாடிகள் காணப்படுகின்றன.

2. ஐந்து மாணவர்கள் அமர்ந்திருக்கின்றார்கள்.

3. இங்கு இருக்கும் மாணவர்கள் மிகவும் கவலையாக இருக்கின்றனர்.

2.பின்வரும் உருச்சோடிகளில் **மிகக் குறைந்த** தொடர்பைக் காட்டும் உருக்களின் கீழ் கோடிடுக.



1



2



3

3.பின்வரும் இரு உருக்களிலும் காணப்படும் **வேறுபாடுகள்** எத்தனை?



1.நான்கு வேறுபாடுகள் உள்ளன.

2.நான்கிலும் அதிக வேறுபாடுகள் உள்ளன.

3.நான்கிலும் குறைவான வேறுபாடுகள் உள்ளன.

4. ஆகாயவிமானம் என்ற சொல்லைப் பயன்படுத்தி **உருவாக்க முடியாத** சொல் எது?

1.கானம் 2.காயம் 3.ஆலயம்


5.ஆங்கிலேயர்கள் இலங்கை முழுவதையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது எத்தனையாம் நூற்றாண்டின் எந்த தசாப்தத்திலாகும்?

1. 19ஆம் நூற்றாண்டு 3ஆம் தசாப்தம்
2. 19ஆம் நூற்றாண்டு 2ஆம் தசாப்தம்
3. 20ஆம் நூற்றாண்டு 16ஆம் தசாப்தம்


6. 10 தொடக்கம் 20வரையான எண்ணும் எண்களில் 2,3 ஆல் மீதியின்றி வகுபடும் எண்களின் எண்ணிக்கை யாது?

1. 2 2. 3 3. 4


7.ஒரு வகுப்பிலுள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 36 ஆகும். அவர்களுள் 12பேர் பெண் பிள்ளைகள் ஆவார். அதன் படி வகுப்பிலுள்ள பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை வகுப்பிலுள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கையில் என்ன பங்கு என்பதைக் காட்டும் உரு எது?



1



2



3

8. பிராணிகள் மீது நாம் ஏன் கருணை காட்ட வேண்டும்?

1. பிராணிகள் எம் மீது கருணை காட்டுவதால்

2. பிராணிகள் எமக்கு நன்மை செய்வதால்

3. பிராணிகளும் நம்மைப் போன்று வாழ விரும்புவதால்.

9. ஒன்பது தீப்பெட்டிகளை ஒன்றின் மீது ஒன்று வைத்து ஒட்டி எல்லாப் பக்கமும் வெள்ளை மை பூசப்பட்டு பின் அவை தனித்தனியே பிரிக்கப்பட்ட போது அவ் தீப்பெட்டிகளில் எத்தனை முகங்கள் வெள்ளை மை பூசப்படாது இருக்கும்?


1. 16     2. 20     3. 18

10. பின்வரும் எண்கோலத்தை அவதானித்து இடைவெளிக்குப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 3 | 7 | 2 | 4 | 2 | 5 | 2 | 7 | 3 |
| 64 | | 81 | | ........................... | | 49 | | 100 | |


1. 25     2. 36     3. 48

11.இவ்வுருவிலுள்ள மேற்பரப்புக்களின் மொத்த எண்ணிக்கை யாது?




1. 8     2. 10     3. 12

12. இவ்வுருவில் ¾ பகுதியை நிழற்றுவதற்காக நிறந்தீட்டப்பட்டுள்ளன. கட்டங்களுக்கு மேலதிகமான இன்னும் எத்தனை கட்டங்கள் நிறந்தீட்டப்பட வேண்டும்.



1. 12     2. 09     3. 06

13. இவ்வுருவிலுள்ள வட்டங்களின் மொத்த எண்ணிக்கை யாது?



1. 07 2. 08 3. 09

14. ஒரு வட்ட வடிவக் கடதாசியை ஆறாகப் பிரித்து முறையே ஊதா, நீலம், பச்சை, மஞ்சள், சிவப்பு, கறுப்பு நிறங்கள் தீட்டப்பட்டன எனின் சிவப்பு நிறத்திற்கு எதிரே தீட்டப்பட்ட நிறம் யாது?

1.நீலம் 2.ஊதா 3.மஞ்சள்

15. ஒரு பட மாளிகையில் இரண்டு ஆண்களுக்கும் ஒரு பெண்ணுக்கும் ரூபாய் 8.00 க்கும் இரண்டு பெண்களுக்கும் ஒரு ஆணுக்கும் ரூபாய் 7.00க்கும் அனுமதிச் சீட்டுக்கள் வழங்கப்பட்டன அவ்வாறாயின் ஒரு பெண்ணுக்குரிய அனுமதிச் சீட்டின் விலை யாது?

1.ரூபாய்9.00 2.ரூபாய்3.00 3.ரூபாய்2.00

16. ஒரு மாணவன் 3 பாடங்களில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் சராசரி 75 ஆகும். அவன் 4 பாடங்களில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் சராசரி 80 ஆகும். எனின் அம் மாணவன் 4வது பாடத்தில் பெற்ற புள்ளி யாது?

1.90 2.80 3.95

17. ஒரு மண்டபத்தில் 3 மேசைகள் வீதமுள்ள 8 நிரைகளும் 5 மேசைகள் வீதமுள்ள 12 நிரைகளும் உள்ளன. அந் நிரைகளிலுள்ள மேசைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

1. 60 2.24 3.84


18. அப்பிள் பழங்களைப்போல் இருமடங்கு தோடம்பழங்களும் தோடம்பழங்களைப்போல் மூன்று மடங்கு மாம்பழங்களும் ஒரு பெட்டியில் இருந்தன.அப்பெட்டியில் எல்லாமாக 27 பழங்கள் இருந்தன எனின் பெட்டியில் இருந்த மாம்பழங்கள் எத்தனை?

1.9 2.12 3.18

19. ஒரு சதுரவடிவக் காணியின் மூன்று பக்கங்களுக்கும் கம்பி வேலி அமைப்பதற்காக கம்பித் தூண்கள் நடப்பட்டன.ஒரு பக்கத்தில் உள்ள தூண்களின் எண்ணிக்கை 9 எனின் காணியின் மூன்று பக்கங்களிலும் நடப்பட்ட தூண்களின் எண்ணிக்கை யாது?

1.32 2.27 3.25

20.பின்வரும் கதைப்படத்தை ஒழுங்குபடுத்தும் போது கிடைக்கும் விடை யாது?




1. A, C, B

2. B, A, C

3. A, B , C

21. ஒரு பண்ணையில் உள்ள மாடுகளினதும் கோழிகளினதும் எண்ணிக்கை 10 ஆகும் அவற்றின் கால்களின் எண்ணிக்கை 28 ஆகும்.

இப்பண்ணையில் உள்ள மாடுகளின் எண்ணிக்கை?

1. 6 2. 8 3. 4

22. ரவியிடம் ரூ.5.00 நாணயங்களும் ரூ2.00 நாணயங்களும் மட்டும் இருந்தன. அதன்படி அவனிடம் மொத்த பணமாக இருக்க முடியாதது.

1. ரூபாய் 11.00 2. ரூபாய் 9.00 3. ரூபாய் 10.00

23. துரை வீட்டில் மின்விசிறி 8.00 மணி தொடக்கம் 10.00மணி வரையும் குளிர்சாதனப்பெட்டி 7.00 தொடக்கம் 11.00மணி வரையும் தொலைக்காட்சி 6.00 மணி தொடக்கம் 9.00மணி வரையும் இயங்கின எனின் மூன்று பொருட்களும் ஒன்றாகத் தொழிற்பட்ட மணித்தியாலங்கள் எத்தனை?

1. 1மணித்தியாலங்கள் 2. 2மணித்தியாலங்கள் 3. 30நிமிடங்கள்

24. ஓர் இடத்தில் இருந்து எதிரெதிர் திசையில் நடக்க ஆரம்பித்த இருவர் முதலில் 50 மீற்றர் வீதம் சென்று தத்தமது வலது கை பக்கமாக திரும்பி 50மீற்றர் வீதம் சென்று மீண்டும் வலது கை பக்கமாக திரும்பி 50 மீற்றர்கள் வீதம் சென்று நின்றார்கள் தற்போது அவர்கள் இருவருக்கும் இடையிலான தூரம்

1. ஆரம்பித்த இடம் 2. 100 மீற்றர் 3. 200 மீற்றர்

25.


| | | |
|---|---|---|
| K | L | C |
| D | X | H |
| E | F | I |

செயற்பாடு -1 முதலாவது நிரையை இரண்டாவது நிரைக்கும் இரண்டாவது நிரையை முதலாவது நிரைக்கும் மாற்றுக..

செயற்பாடு–2 இரண்டாவது நிரலை முதலாவது நிரலுக்கும் முதலாவது நிரலை இரண்டாவது நிரலுக்கும் மாற்றுக..

மாற்றம் செய்த பின்னர் நடுவில் வரும் எழுத்து யாது?

1.X 2. L 3. k

26. 
இவ்வுருவை புள்ளிக் கோடுகள் வழியே வெட்டும் போது உருவில் தோன்றும் புதிய வட்ட முகங்கள் எத்தனை?

1. 10 2. 12 3. 8

27. குமார் 36 சோடா மூடிகளை சேகரித்து வைத்திருந்தான். 6 சோடா மூடிகளைக் கொடுத்தால் ஒரு சோடாவைப் பெறலாம். எனவே குமாரால் பெற்றுக் கொள்ளக் கூடிய சோடாப் போத்தல்களின் எண்ணிக்கை யாது?

1. 7 2. 8 3. 6

28. பின்வரும் வாக்கியம் கருத்துள்ளதாக இருப்பதற்குச் செய்யவேண்டிய மாற்றத்தை தெரிவு செய்க.

**பிள்ளை வீதியில் பாடம் படிக்கிறது**

1. பிள்ளை என்பதற்கு பதிலாக சிறுவன் என்பதை இடுதல்
2. படிக்கிறது என்பதற்கு பதிலாக விளையாடுகிறது என்பதை இடுதல்
3. வீதியில் என்பதற்கு பதிலாக அறையில் என்பதை இடுதல்


29. வருடத்தின் முதல் ஐந்து மாதங்களும் தொழிற்சாலையில் வேலை நடைபெறும். இவ்வைந்து மாதத்தில் தொடர்ந்து மூன்று மாதங்கள் முருகேசால் தொழிற்சாலைக்கு வேலைக்கு செல்ல முடியவில்லை. இக் கூற்றுக்கு ஏற்ப சந்தேகமின்றி முருகேசால் தொழிற்சாலைக்கு வேலைக்கு செல்ல முடியாத மாதம் எது?

1. மாசி　　2 பங்குனி　　3. சித்திரை

30. தவளை ஒன்று 15m நீளமான கம்பமொன்றில் நிமிடத்திற்கு 5m ஏறி 3m சறுக்கும் எனின் எத்தனையாவது நிமிடத்தில் கம்பத்தின் உச்சியை அடையும்?

1. 5 நிமிடம்　　2. 6 நிமிடம்　　3. 7 நிமிடம்

31. தாயக்கட்டையின் முகங்கள் பச்சை, நீலம், மஞ்சள் , சிவப்பு, கறுப்பு, வெள்ளை ஆகும். எனின் மஞ்சளின் எதிர்ப்பக்கம் யாது?




1.மஞ்சள்　　2. கறுப்பு　　3. வெள்ளை

32. கட்டட வேலை ஒன்று 2020ம் ஆண்டு தை மாதம் ஆரம்பித்தது. அவ் வேலை மூன்று வருடங்களில் நிறைவு பெற்றது. எனின் கட்டட வேலை முடிவடையும் வருடம் யாது?

1. 2023　　2. 2022　　3. 2024

33. புகையிரதம் ஒன்று 10km கல்லில் இருந்து 25km கல்லை கடப்பதற்கு 30 நிமிடங்கள் எடுத்தது எனின் அதே கதியில் 35km கல்லை கடப்பதற்கு எத்தனை நிமிடங்கள் எடுக்கும்?

1. 10 நிமிடங்கள்　　2. 20 நிமிடங்கள்　　3. 05 நிமிடங்கள்


34. கண்காட்சி ஒன்றில் ஆண்கள் 500 பேரும் பெண்கள் 400 பேரும் சிறுவர்கள் 300 பேரும் கலந்து கொண்டனர் எனின் கண்காட்சியை பார்வையிட்ட மொத்த நபர்களின் எண்ணிக்கை யாது?

1. 900 பேர்　　2. 1200 பேர்　　3. 1000 பேர்

35. 2020ம் ஆண்டு தைமாதம் 1ம் திகதி புதன் கிழமை எனின் 2021ம் ஆண்டு தைமாதம் 1ம் திகதி என்ன நாளாகும்?

1. வியாழன்　　2. வெள்ளி　　3. புதன்

36. இவ்வுருவில் உள்ள முக்கோணிகள் செவ்வகங்களின் எண்ணிக்கை முறையே



1. 2, 3
2. 4, 4
3. 3, 4

37. மூன்று நபர்களின் சராசரி வயது 25 ஆகும். இதில் கமலின் வயது 15 வயது ஆகும் விமலின் வயது 25 ஆகும் எனின்ன அமலின் வயது யாது?

1. 25
2. 30
3. 35

38. 2மணிக்கு 2 மணிகளை அடிக்க 1 செக்கன் எடுத்தது எனின் 4 மணிக்கு 4 மணிகளை அடிக்க எவ்வளவு நேரம் எடுக்கும்?

1. 2 செக்கன்
2. 3 செக்கன்
3. 4 செக்கன்

39. மன நிறைவே ஒருவனுக்கு சிறந்த செல்வமாகும் எனும் கருத்தை தரும் பழமொழி

1. பேராசை பெருந்தரித்திரம்
2. ஆற்றிலே போட்டாலும் அளவறிந்து போடு
3. போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து

40. ஒரு நிரையில் கொடிகள் நடப்பட்டிருந்தன. சிவப்புக் கொடிக்கும் பச்சைக் கொடிக்கும் சரி நடுவில் வெள்ளைக்கொடியும், பச்சைக் கொடிக்கும் வெள்ளைக்கொடிக்கும் நடுவில் மஞ்சள் கொடியும் உள்ளது. சிவப்புக் கொடிக்கும் பச்சைக் கொடிக்கும் இடையில் உள்ள தூரம் 64m எனின் சிவப்புக் கொடிக்கும் மஞ்சள் கொடிக்கும் இடையிலான தூரம் யாது?

1. 32m
2. 48m
3. 40m